www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# ECONOMICS
# SLOWLEARNERS- BLUE PRINT
# 11TH STANDARD-2019-2020.

| LESSON | EXPECTED NUMBER OF QUESTIONS | EXPECTED MARKS | TOTAL MARKS |
|---|---|---|---|
| PART-B LESSON- 1 TO 7, 10 & 11 ( TOTAL NINE LESSON ) | 7 | 12 | 12 |
| PART-C LESSON- 1 TO 6, ( TOTAL SIX LESSON) | 5 | 12 | 12 |
| PART-D LESSON- 2 ,4,5,8,10,11 ( TOTAL SIX LESSON) | 3 | 10 | 10 |
| TOTAL | | | 34 |

G.PREMCHANDRAN KAMAK HSS KRISHNAPERI VNRDt.,

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## PART-B

## பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.

### LESSON-1

***1. பொருளியல் என்றால் என்ன?***

பொருளியல் என்றால் இல்லங்களின் நிர்வாகமென்று பொருள்படும்.

***2. நுண் பொருளியல் என்றால் என்ன?***

தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடும்பங்கள் பற்றி நுண் பொருளியல் ஆராய்கிறது.

***3. பண்டங்கள் என்றால் என்ன?***

பொருளியலில் பண்டங்கள் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும்.

***4. பண்டங்களை பணிகளிலிருந்துவேறுபடுத்துக.***

பணிகள் என்பது உளவியல் அடிப்படையில் உனரக்கூடியவைகள், ஆனால் பண்டங்கள் தொட்டுணரக் கூடியது

***5. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக.***

1. இடப்பயன்பாடு 2. காலப்பயன்பாடு 3.வடிவப்பயன்பாடு

***6.இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.?***

இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும். இது பொருளியல் கோட்பாடுகளை விளக்க முயற்சிக்கிறது.

***7. பகுத்தாய்வின் பொருள்கூறுக?***

இது பொதுக் கருத்திலிருந்து தனிக் கருத்தைப் பெறுவது ஆகும்.

### LESSON-2

***8. பயன்பாடு என்றால் என்ன?***

மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி பயன்பாடு எனப்படும்.

***9. விருப்பங்களை வகைப்படுத்துக.***

இன்றியமையாத விருப்பங்கள்,---உணவு உடை இருப்பிடம்.
வசதிக்கான விருப்பங்கள்,---மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி.
ஆடம்பரத்திற்கான விருப்பங்கள்,---நகைகள், வைரம்.

***10. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அனுகுமுறைகளை குறிப்பிடுக.***

குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி, சம இறுதிநிலை பயன்பாட்டு விதி, நுகர்வோர் எச்சம், தேவைவிதி,மற்றும் சமநோக்கு ஆய்வு முறைகள்

***11. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி?***

1.முற்றிலும் நெகிழ்ச்சி உள்ள தேவை 2. மிகைத்தேவை நெகிழ்ச்சி. 3.அலகுத்தேவை நெகிழ்ச்சி
4. குறைந்த தேவை நெகிழ்ச்சி. 5.முற்றிலும் நெகிழ்ச்சி அற்ற தேவை

***12. சமநோக்கு வளைகோடு என்றால் என்ன?***

*இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே சமநோக்கு வளைகோடு எனப்படும்

***13. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.***

நுகர்வோர் எச்சம் =மொத்த பயன்பாடு-மொத்தச் செலவு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***14. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?***
ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ் நிலைப் பண்டங்கள் கிஃபன் பொருள்கள் எனப்படும். கீழ் நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும்.

## LESSON-3

***15. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக?***
1. நிலம் மற்றும் உழைப்பு என்பது முதன்மை உற்பத்திக்காரணிகளாகும்.,
2. மூலதனம், மற்றும் அமைப்பு. என்பது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகளாகும்.

***16. உழைப்பு --வரையறு.***
பொருளியலில் வருமானத்தை எதிர்பார்த்து, மனிதன் தன் உடல்,அல்லது அறிவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் கடும் முயற்ச்சியே உழைப்பு ஆகும்

***17. உற்பத்திச் சார்பினை குறிப்பிடுக.***
உற்பத்தி சார்பு என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு மற்றும் வெளியீடுகளுக்கு இடையே உள்ள தொடர்பாகும்.

***18. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.***
கூடுதலாக ஓர் அலகு காரணியை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் மொத்த உற்பத்தியில் ஏற்படுகின்ற கூடுதல் காரணியின் இறுதிநிலை உற்பத்தி எனப்படும்.

***19. சம உற்பத்திச் செலவுக்கோடு என்றால் என்ன?***
ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவு பணச்செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளைக் குறிப்பிடுவதே சம உற்பத்திச் செலவுக்கோடு ஆகும்.

***20. உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?***
உற்பத்தியாளரின் சமநிலை நிபந்தனை என்பது

$MRTS_{LK} = P_L / P_K$ L = உழைப்பு , K = மூலதனம்

***21. அளிப்புக் கோடு மேல்நோக்கிச் செல்வதன் காரணம் என்ன?***
விலைக்கும் அளிப்பிற்கும் நேரடித் தொடர்பு உள்ளது ஆகவே அளிப்புக்கோடு மேல் நோக்கிச் செல்லும்.

## LESSON-4

***22. அமிழ்த்தப்பட்ட செலவு அல்லது மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?***
மீட்டு எடுக்க முடியாத கடந்த காலச் செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவு ஆகும்.

***23. மாறாச் செலவு என்றால் என்ன?***
மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை..எ.கா. நிறுவனத்தின் வாடகை

***24. உண்மைச் செலவு என்றால் என்ன?***
ஆடம் சுமித் கருத்துப்படி உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மைச் செலவு என்று கூறுகிறார்

***25. வெளியுறுச் செலவு.என்றால் என்ன?***
உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் வெளியுறுச் செலவு. எனஅழைக்கப்படும். எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி ம்ற்றும் சம்பளம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***26. செலவை வரையறு.***
ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச்செலவு ஆகும்.

***27. செலவுச் சார்பை வரையறு.***
இது மொத்த செலவிற்கும் மற்றும் உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது.

***28. வருவாயை வரையறு.***
உற்பத்தியாளர் பண்டத்தை ஒரு குறிப்பிட்ட விலையில் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற வருமானமே வருவாய் ஏனப்படும்.

## LESSON-5

***29. அங்காடி வரையறு?***
பொருளியலில் அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தைக் குறிக்கும்.

***30. விலையை ஏற்பவர் யார்?***
நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள் விலையை ஏற்பவர்களாக உள்ளனர்.


***31. விற்பனைச் செலவு என்றால் என்ன?***
விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.


***32. விலைபேதம் காட்டும் இரண்டு தன்மைகளை கூறுக.***
1. முதல் நிலை -- முற்றிலும் நுகர்வோர் சுரண்டப்படும் நிலை.
2. இரண்டாம் நிலை --உள்நாட்டில் ஒரு விலையும் ,வெளிநாடுகளில் வேறு விலையும் பெறுவது..

***33. உபரி சக்தி விளக்குக.***
உச்ச உற்பத்தி அளவைவிட குறைவாகவே உற்பத்தி செய்வது உபரிசக்தி வீணாக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

***34. கீழ்கண்ட நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக அ. நிறைவுப்போட்டி ஆ.முற்றுறிமை***

**அ. நிறைவுப்போட்டி**
**ஆ.முற்றுறிமை**




## LESSON-6

***35. உண்மைக்கூலிக்கும் பணக்கூலிக்கும் உள்ள வேறுபாடு யாது?***
பணக்கூலி என்பது பெயரளவுக் கூலி ,உண்மைக் கூலி என்பது பணத்தின் வாங்கும் சக்தியைப் பொருத்து அமையும்.

***36. பகிர்வு என்றால் என்ன?***
நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்தளிப்பதை பகிர்வு என்கிறோம்.

***37. பகிர்வின் வகைகள் யாவை?*** 1. தனிநபர் பகிர்வு 2. பணிசார்பு பகிர்வு



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***38.வாரம் வரையறு.***
வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்.--ரிக்கார்டோ.

***39. வட்டி பற்றி நீ அறிவது யாது?***
மூலதனத்திற்கான வெகுமதியே வட்டி ஆகும்.

***40.இலாபம் என்றால் என்ன?***
தொழில் முனைவோரின் தொழில் திறமையை பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்படும் வெகுமதியே இலாபம் ஆகும்.

***41. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?***
ரொக்கப் பணமாக கையில் வைத்திருப்பதே நீர்மை விருப்பம். ஆகும்.

## LESSON-7

***42. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.***
ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் குறிக்கப்படுகிறது.

***43. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளைகூறுக.***
இயல்புகள்
1. உயர்ந்த நாட்டு வருமான வளர்ச்சி 2. உயர்ந்த தனிநபர் வருமானம்
3. உயர்ந்த வாழ்கைத் தரம் 4. தொழில்துறையின் ஆதிக்கம்.

***44. இயற்கைவளங்களைப் பற்றிக் குறிப்பு வரைக.***
காடு, நீர், கனிம வளங்கள் மற்ற றும் ஆற்றல் சக்திகள் ஆகியன முக்கிய இயற்கை வளங்கள் ஆகும். .

***45. இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக்கூறு.***
**இந்தியப் பொருளாதாரம் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து சீரியமுறையில் செயல்படுவது.**

***46. புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்கள் தருக***
**மீண்டும் உருவாக்கப்பட முடியாத வளங்கள் எ.கா. நிலக்கரி, பெட்ரோலியம்**

***47. "தொழில்நுட்பத் தெரிவு" பற்றி சென் கூறுவது என்ன?***
**உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் மூலதன செறிவு நுட்ப முறையில், வேலை வாய் ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று சென் குறிப்பிடுகிறார் .**

***48. குறைந்த தலாவருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவதைப் பட்டியலிடுக***
**1.முறையற்ற நிலவுடைமை, 2. முதலீடு இன்மை**
**3. வே ளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம்**
**4. பேரளவு தொழில்துறை இன்மை**

## LESSON-10

**பகுதி - ஆ**

***49. ஊரக பொருளாதாரம் -- வரையறு.***
**பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரகபகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது**
***50. ஊரக வளர்ச்சி என்றால் என்ன?***
**ஊரக வளர்ச்சி என்பது ஊரகபகுதிகள், ஊரகமக்கள் ,ஊரகவாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***51. ஊரகஏழ்மை -- வரையறு.***
கிராமங்களில் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையை ஊரகவறுமை எனலாம்.

***52. திறந்தநிலை வேலையின்மை என்றால் என்ன?***
வேலைக்குத் தயாராக இருந்தும் எந்த வேலையும் கிடைக்காமல் இருப்பது ஆகும்.

***53. மறைமுக வேலையின்மை என்றால் என்ன?***
வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலைஉற்பத்தித்திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை எனப்படும்.

***54. குடிசை தொழில் வரையறு.***
பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன. இதன் மூலம் ஊரகமக்கள் முழுநேர மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள்.

***55. குறுங் கடன் என்றால் என்ன?***
குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். சிறுதொழில் புரிவோருக்கு தேவையான நிதியைவழங்கி அவர்களை வணிகத்தில் முதலீடு செய்யவைப்பதே ஆகும்.

***56. ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டுகூறு.***
1. குடிநீர்வசதி, 2. நல்லசுகாதாரவசதி, 3.முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழிவகைகள்.

***57. ஊரகமின் மயமாக்கல்--வரையறு.***
ஊரகமின் மயமாக்குதல் என்பது ஊரகபகுதிகளுக்கு மின்வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

LESSON-11

பகு தி – ஆ

***58. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கூறுக. விகிதங்களையும் குறிப்பிடுக***
1. தேனி ( 900 ), 2. தர்மபுரி ( 946 )

***59. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வரையறு***
மாநிலத்தில் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.

***60. தமிழ்நாட்டுக் கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக்கு றிப்பிடுக***
1. நெல் 2. கம்பு 3. சோளம் 4. நிலக்கடலை 5. சிறு தானியங்கள்

***61. தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?***
1. சென்னை, 2. எண்ணூர் 3. தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம்

***62. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?***
பாரம்பரிய மற்றும் தொண்மை வாய்ந்த சிறப்பு மிக்க பகுதிகளுக்கு மேற்கொள்ளும் பயனம்.

***63. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?***
1. கல்பாக்கம், 2. கூடங்குளம்

***64. குறு நிறுவனங்கள்- வரையறு***
25 இலட்சத்திற்கு மிகாமல் மூலதன முதலீடு கொண்ட நிறுவனங்கள்-- குறு நிறுவனங்கள்ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## PART-C LESSON-1

*1. பொருளாதாரத்தின் வேறுபாடுகள் யாவை?*

**நுண்ணியல் பொருளாதாரம்** தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது

**பேரியல் பொருளாதாரம்** நாட்டின் ஒட்டு மொத்த செயல் பாடுகளைப் பற்றி ஆராய்கிறது. வருமானக்கோட்பாடு, வேலைவாய்ப்புக் கோட்பாடு. விலைக் கோட்பாடு பணக் கோட்பாடுஆகியவற்றை ஆராய்கிறது.

*2. இயல்புரை பொருளியல் **மற்றும்** நெறியுரை பொருளியல் **ஒப்பிடுக.***

**இயல்புரை பொருளியல்**

இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும்.

**நெறியுரை பொருளியல்**

இது பொருளியல் என்பது எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல்.

***3. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?***

**பயன்பாட்டின் இயல்புகள்**

1. பயன்பாடு உளவியல் சார்ந்தது. . 2. பயன்பாட்டை அளவிட முடியாது.
3. பயன்பாடு மனித விருப்பத்தைச் சார்ந்தது.

*4. பொருளாதாரத்தைப் பற்றி இலயனல் ராபிசின் இலக்கணத்தை ஆராய்க?*

1. "விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிய அறிவியலே பொருளியல்" ஆகும் .
2. விருப்பங்கள் எல்லையற்றது. விருப்பங்களை நிறைவு செய்யும் வளங்கள் பற்றாக்குறையானவை. பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழி செய்கிறது
3. இவரது இலக்கணம் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

***5.பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி.***

**இயல்புகள்.**

1. பணிகள் என்பது கண்களுக்கு புலப்படாத ஒன்று.
2. பணியாளரிடமிருந்து பணிகளை பிரிக்க முடியாது எ.கா. உழைப்பாளர்
3. பணிகள் அழியக்கூடியவை.

***6. என்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?***

என்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள்

1. அத்தியாவசியப் பொருட்களை உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பர பண்டங்களை உற்பத்தி செய்வதா?
2. விவசாயப் பொருட்களா அல்லது தொழிற்சாலை பொருட்களா,
3. நுகர்வுப் பண்டமா? அல்லது முதலீட்டுப் பண்டமா?

## LESSON-2

*7. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை?*

பண்புகள்

1.வலப்புறமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும். 2.தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3.ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

*8. மொத்தபயன்பாடு இறுதிநிலை பயன்பாடு **வேறுபடுத்துக.***

1. **மொத்தபயன்பாடு** :- ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாடு
2. **இறுதிநிலை பயன்பாடு**:- மொத்த பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் ஆகும்.

*9. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை?*

**மனிதவிருப்பத்தின் இயல்புகள்.**

1.விருப்பங்கள் எண்ணற்றவை 2.விருப்பங்கள் நிறைவேறக்கூடியவை
3.விருப்பங்கள் போட்டியிடுபவை 4.விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5.விருப்பங்கள் மண்டும் மீண்டும் தோன்றும் இயல்புடையது
6.விருப்பங்கள் விளம்பரங்களின் மூலம் தோன்றும் இயல்புடையது.
7.விருப்பங்கள் பழக்கங்களாகவும் வழக்கங்களாகவும் மாறக்கூடிவை




***10. நுகர்வோர் உபரியை படம் வரைந்து விளக்குக?***

**நுகர்வோர் எச்சத்தை அளவிடுதல்**

நுகர்வோர் எச்சம் =மொத்த பயன்பாடு-மொத்தச் செலவு.

**விளக்கம்:-**

1. E என்ற புள்ளியில் MU=P என்றிருக்கும்.
2. PAE என்ற கோடிட்டபகுதி நுகர்வோர் உபரியை காட்டுகிறது.

***11. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.***

**இலக்கணம்**

ஒரு பொருளை வாங்கமுடிவு செய்து கொடுக்க நினைக்கும் விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ளவேறுபாடே நுகர்வோர் எச்சம் எனப்படும்.
நுகர்வோர் எச்சம் =மொத்த பயன்பாடு-மொத்தச் செலவு.

***12. தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கத்தை வேறுபடுத்துக.***

1. விலைமாற்றத்தால் தேவை மாறுவதை குறிப்பிடுகிறது.
2. விலை கூடும்போது தேவை குறைகிறது இது தேவை சுருக்கம் ஆகும்.
3. விலை குறையும்போது தேவை கூடுகிறது இது தேவை விரிவு ஆகும்.

***13. நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி.***

1. சமநோக்கு வளைகோடு, வரவு செலவுக் கோட்டிற்கு தொடுகோடாக இருக்கும்.
2. அப்போது நுகர்வோர் சமநிலை அடைவார்.
3. அந்நிலையில் அவர் உச்ச பயன்பாட்டைப் பெறுகிறார்.

## LESSON-3

***14. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?***

**நிலத்தின் சிறப்பியல்புகள்.**

1. நிலம் இயற்கையின் கொடை ஆகும் 2. இதன் அளிப்பு நிலையானது.
3. நிலம் அழிவில்லாதது. 4. நிலம் அசைவற்றது.

***15. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?***

**தொழில் முனைவோரின் பணிகள்**

1.இலாபகரமான முதலீட்டு வாய்புகளை தேர்ந்தெடுத்தல்.
2. உற்பத்தி அளவைத் தீர்மானித்தல் 3. காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பைக் கண்டறிதல். 4. புத்தாக்கப்பணி. 5. இடர்பாடுகளை ஏற்றல்,

***16. அளிப்பு நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுக?***

**அளிப்பு நெகிழ்சி**

விலை மாற்றத்தின் விளைவாக அளிப்பின் அளவில் ஏற்படும் மாற்றம் .

**அளிப்பு நெகிழ்சியின் வகைகள்**

1.மிகை நெகிழ்ச்சிஅளிப்பு 2.குறைந்த நெகிழ்ச்சிஅளிப்பு.
3.அலகு நெகிழ்ச்சி அளிப்பு 4.முற்றிலும் நெகிழ்ச்சி அற்ற அளிப்பு
5.முற்றிலும் நெகிழ்ச்சி உடைய அளிப்பு

***17. மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி.***

**TP,AP,MP இடையே உள்ள தொடர்பு**

1. TP அதிகரிக்கிறது. AP -ஐ விட MP அதிகமாக அதிகரிக்கிறது.
2. MP பூஜ்யத்தில் இருக்கும் போது TP உச்சத்தில் இருக்கும்
3 MP எதிர்மறையாக இருக்கும் போது TP மற்றும் AP இரண்டும் குறையத் தொடங்குகின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

***18. உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.***

**உற்பத்தியாளர் சமநிலை**

1. ஒரு சிறந்த உற்பத்தியாளன், கொடுக்கப்பட்ட காரணிகளின் உற்பத்திச் செலவில், அதிக அளவு உற்பத்தியை பெற முயல்வான்.
2. குறைந்த அளவு உற்பத்திக் காரணிக் கலவைகளைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீட்டில் உச்ச இலாபத்தை உற்பத்தியாளர் பெறுகிறார்
3. உற்பத்தியாளரின் சமநிலை நிபந்தனை என்பது $MRTS_{XY} = P_X/P_Y$

***19. காப்---டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.***

காப்-டக்லஸ் உற்பத்தி சார்பு பின்வருமாறு.. $Q = AL^{\alpha} K^{\beta}$

L = உழைப்பு K = மூலதனம் $\alpha + \beta > 1$ வளர்ந்து செல் விகித விளைவு விதி

$\alpha + \beta = 1$. மாறா விகித விளைவு விதி, $\alpha + \beta < 1$குறைந்த செல் விகித விளைவு விதி

***20. அளிப்பு நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?***

1. பொருட்களின் தன்மை 2. உற்பத்திச் செலவு.
3. தொழில்நுட்ப நிலை 4. கால அளவு.

## LESSON-4

***21. மாறும் செலவையும் மாறாச் செலவையும் வேறுபடுத்துக.***

1. மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை.எ.கா. நிறுவனத்தின் வாடகை.
2. மாறும் செலவு உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடும். எ.கா. கச்சாப் பொருள்களுக்கான செலவுகள்.

***22. பணச் செலவையும் உண்மைச் செலவையும் வேறுபடுத்துக.***

1. பணச்செலவு என்பது பணமாக செலவிடுகின்ற அனைத்து தொகையையுமே பணச்செலவு ஆகும் எ.கா. மூலப்பொருள் செலவு,
2. உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மைச் செலவு என்று ஆடம் சுமித் கூறுகிறார்

***23. வெளியுறுச் செலவையும்,உள்ளார்ந்த செலவையும் வேறுபடுத்துக.***

1. வெளியுறுச் செலவு என்பது உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் எ.கா. கூலி ம்ற்றும் சம்பளம்.
2. ஒரு தொழில் முனைவோர் தனக்கு சொந்தமான காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் அதற்கான வெகுமதியே உள்ளார்ந்த செலவுகள் ஆகும்

***24. வாய்ப்புச் செலவு.என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.***

வாய்ப்புச் செலவு. என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும். எ.கா. விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும். அவ்விவசாயி நெல் விளைவித்தால், நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டுத்தந்த கரும்பின் உற்பத்தி அளவே ஆகும்.

*25. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக?*

**இறுதிநிலைச்செலவு** - கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்தச் செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படும்.

**<u>உதாரணமாக</u>**

$MC_n = TC_n - TC_{n-1}$ $TC_n = 154$ , $TC_{n-1} = 150$ ,

$MC_n = 154-150$ $MC_n = 4$.



www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***26. இறுதிநிலை வருவாய் குறிப்பு வரைக.***

**இறுதிநிலை வருவாய் :-** கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.

**$MR = TR_n - TR_{n-1}$**

1. விலை மாறாதபோது AR மற்றும் MR கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும்.
2. விலை மாறும் போது **AR** கோட்டிற்கு கீழே **MR** கோடு இருக்கும்.

***27. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.***

**இறுதிநிலைச்செலவு** - கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்தச் செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படும்.

$MC_n = TC_n - TC_{n-1}$ <u>உதாரணமாக</u> , $MC_n = 154-150$ :. $MC_n = 4$.

**சராசரி செலவு** என்பது மொத்தச் செலவை உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைக்கும் ஈவு சராசரிச்செலவு எனப்படும்

$AC = TC/Q$ $AC = 1000/10 = 100$ $AC = 100$.

***28. நீண்டகால சராசரிச் செலவு வளைக்கோடு பற்றி குறிப்பு வரைக?***

1. நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை.
2. நீண்டகால உற்பத்திக்கும் நீண்டகால உற்பத்திச் செலவிற்கும் இடையே உள்ள தொடர்பை நீண்டகால சராசரிச் செலவு வளைக்கோடு விளக்குகிறது.
3. நீண்டகால சராசரி செலவுக்கோடு திட்டவளைகோடு என்றும் அழைக்கப்படும்.
4. LAC --என்பது நீண்டகால சராசரி செலவுக்கோடு.

## LESSON-5

***29. அங்காடியின் பண்புகள் யாவை?***

<u>பண்புகள்.</u>

1. வாங்குவோரும், விற்போரும் இருப்பர்.
2. வாங்குவோரும் விற்போரும் நேரடியாக சந்தித்துக் கொள்ள வேண்டியதில்லை.
3. தொலைதொடர்பு சாதனங்கள் மூலம் பரிமாற்றம் நடைபெறலாம்.
4. அங்காடியில் பண்டங்களுக்கு விலை இருக்க வேண்டும்.

***30. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்யாவை?***

**நிறுவனம்**

பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு அமைப்பு நிறுவனம். எ.கா. சங்கர் சிமெண்ட்

**தொழில்**

ஒரே மாதிரியான பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்யக்கூடிய பல நிறுவனங்களின் தொகுப்பே தொழில் ஆகும். எ.கா. சிமெண்ட் தொழில்

***31. விலை பேதத்தின் நிலைகளை கூறுக.***

<u>விலை பேதத்தின் நிலைகள்</u>

1. முதல் நிலை -- முற்றிலும் நுகர்வோர் சுரண்டப்படும் நிலை.
2. இரண்டாம் நிலை --.உள்நாட்டில் ஒரு விலையும் ,வெளிநாடுகளில் வேறு விலையும் பெறுவது..
3. மூன்றாம் நிலை---தனிநபர் பேதம்....இரயில் பயணத்தில் மூத்த குடிமக்களுக்கு கட்டணச் சலுகை.

***32. விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.***

முற்றுறிமைப் போட்டியில் விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.

எ.கா. தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் போன்றவற்றில் விளம்பரம் செய்தல்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



***33. இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?***

**இயல்புகள்.**

1. ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளரின் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்
2. இரண்டு விற்பனையாளர்களும் விற்பனை தொடர்பான உடன்பாடு செய்திருப்பர்.
3. உற்பத்தி பண்டங்களின் வேறுபாடு இல்லை.
4. அதிக விலை அதிக இலாபம் ஈட்டுவதற்காகவே இருக்கும்.

***34. நிறைவுப்போட்டி மற்றும் முற்றுரிமை அங்காடிகளில் உள்ளே நுழைதல் தன்மை யாது?***

**முற்றுரிமை**--புதிய உற்பத்தியாளர்கள் அங்காடியில் நுழைய வாய்ப்பு இல்லை சட்டங்கள் மற்றும் இயற்கைத் தடைகள் இருக்கும்.

**நிறைவுப்போட்டி**---உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை.--இது நீண்டகாலத்தில் மட்டும் ஏற்படக் கூடியதாகும்.

***35. நிறைவுப்போட்டி மற்றும் முற்றுரிமைபோட்டி அங்காடிகளின் ஒற்றுமையை விளக்குக***

1. இவ்விரு அங்காடிகளிலும் உச்ச இலாபம் பெறுவதாகும்.
2. உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை.
3. எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும்.
4. பதிலீட்டு பண்டங்கள் இருக்கும்

## LESSON-6

***36. பிழைப்பு மட்ட கூலிக் கோட்பாட்டை விளக்குக.***

இக் கோட்பாட்டின்படி தொழிலாளிக்கு கொடுக்கப்படும் கூலியானது அவரது அடிப்படைத் தேவையை மட்டுமே பூர்த்தி செய்வதாக இருக்கும்..

***37. சும்பீட்டரின் இலாப கோட்பாட்டினை விவரி.***

1. புத்தாக்கம் புனைவதற்கான வெகுமதியே இலாபமென்று சும்பீட்டர் கருதுகின்றார்.
2. தொழில்முனைவோரின் புத்தாக்க நடவடிக்கைகளால், இலாபத்தை பெறுகிறார்.
3. புத்தாக்க நடவடிக்கைகளால் பொருளாதார முன்னேற்றமும் சமுதாய மாற்றங்களும் ஏற்படுகின்றன.

***38. இயங்கு நிலை இலாபக் கோட்பாட்டினை கூறுக.***

1. இக்கோட்பாட்டினாசிரியர் கிளார்க் ஆவார் .
2. சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தோன்றுவதே இலாபம் ஆகும்.
3. மக்கள் தொகை முலதன அளிப்பினளவு, தொழில்நுட்பம், மற்றும் விருப்பங்கள் ஆகியன சமுதாய மாற்றங்கள் ஆகும்

***39. இடர்தாங்கும் இலாபக்கோட்பாடு. விவரி?***

1. தொழில்முனைவோரின் இடர்தாங்கும் திறமைக்காக அளிக்கப்படும் வெகுமதியே லாபம் என்று பேராசிரியர் **ஹாவ்லி** குறிப்பிடுகிறார்.
2. இடர்தாங்குதலும், இலாபம் ஈட்டுதலும் ஒருங்கிணைந்து செல்லும்.
3. இக்கோட்பாட்டின் முக்கிய குறைபாடு தெரிந்த இடர்கள், தெரியாத இடர்கள்

***40. பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை?***

1.பரிமாற்ற நோக்கம் 2. முன்னெச்சரிக்கை நோக்கம். 3. ஊக வாணிப நோக்கம்.

***41. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.***

1. பெயரளவுக் கூலி அல்லது பணக்கூலி 2. உண்மைக்கூலி
3. துண்டுகூலி 4. நேரக்கூலி

***42. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.***

1. வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்.--ரிக்கார்டோ.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. இயந்திரங்களிலிருந்தும் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளி லிருந்தும் பெறப்படும் வருமானமே போலி வாரம் எனப்படும் என்று மார்ஷல் கூறுகின்றார்.

# PART-D ( LESSON 2,4,5,8,10,11 )

## LESSON-2


***1. குறைந் து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக?***

**இலக்கணம்** :-"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது "என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்

**எடுகோள்கள் :-**

1.பண்டங்கள் ஒரே தரமானவை 2.கால இடை வெளியின்றி தொடர்ந்து நுகரவேண்டும் 3.பயன்பாட்டை அளவிடமுடியும்.

**விதியின் விளக்கம்,** சாப்பிடும் பழங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.போது நுகர்வோர்ருக்கு கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும் இதை வரைபடம் விளக்குகிறது.




**வரைபடவிளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடு பூஜியத்தில் இருக்கும்.
2.மொத்த பயன்பாடு குறையும் போது இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்**

1.பொருளிய லில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.
2.நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு**

1.பயன்பாட்டினை அளவிடமுடியாது. 2.தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.


***2.தேவை விதியினை விவரமாக எழுதுக?***

**தேவைவிதி:-** "பெர்கூசன்"என்பவரின் கூற்றுப்படி "விலையும் தேவையும் எதிர்கணிய தொடர்பு கொண்டுள்ளன." விலை கூடினால் தேவை குறையும். விலை குறைந்தால் தேவை கூடும்.

**எடுகோள்கள்:-**

1.வருமானத்தில் மாற்றம் இல்லை. 2.சுவையில் மாற்றம் இல்லை.

**தேவை வளைகோடு:-** இது தேவைவிதியின் வரைபட விளக்கமாகும்.




**வரைபட விளக்கம்:-**

1.DD என்பது நுகர்வோரின் தேவை வளைகோடு
2.தேவைக்கோடு கீழ்நோக்கி சரிய காரணம் குறைந்த செல் இறுதிநிலை பயன்பாட்டுவிதி செயல்படுவதே ஆகும்.

**அங்காடிதேவை வளைகோடு** இது ஒருஅங்காடியில் உள்ள அனைத்து நுகர்வோரின் தேவை அளவுகளை கூட்டினால் கிடைப்பதாகும்

***3. தேவை நெகிழ்ச்சியினை அளவிடும் முறைகள் யாவை?***

**1.விழுக்காட்டுமுறை:-**தேவை மாற்ற விழுக்காட்டை விலை மாற்ற விழுக்காட்டால் வகுக்கவேண்டும்.

(எ.கா)அரிசியின் விலை10%அதிகரிக்கும்போது அரிசியின் தேவை 15%குறைந்தால் அது தேவை நெகிழ்ச்சி உடையதாக இருக்கும். விலைத்தேவைநெகிழ்ச்சி=15/10=1.5

**2.புள்ளிமுறை:-** தேவைக்கோட்டின்மீது ஒரு குறிப்பிட்ட புள்ளியில் விலைத்தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம்.

விலைத்தே வை நெகிழ்ச்சி = தேவைக்கோட்டின் கீழ் பகுதி / தேவைக்கோட்டின் மேல்ப

**3. மொத்தச்செலவுமுறை:-**

1. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச்செலவு அதிகரித்தால் அது மிகைத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்.
2. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச்செலவு குறைந்தால் அது குறைத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

3. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச் செலவில் மாற்றம் இல்லை எனில் அது அலகுத் தேவை நெகிழ்ச்சி. எனப்படும்.

***4. சமஇறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.***

**வரையறை:-** மார்ஷலின்கூற்றுப்படி "ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளை பெற்றிருந்தால்,அதன் பலவகைப் பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் இறுதிநிலை பயன்பாடு சமமாய்இருக்கும்படி பகிர்ந்தளிப்பார்"

**அனுமானங்கள்.:-** 1. நுகர்வோர் ஒரு பகுத்தறிவாளர். 2. பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாதது. 3. குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டுவிதி செயல்படுகிறது.

**விளக்கம்.:-** எடுத்துக்காட்டாக ஒரு நுகர்வோர் ஆப்பிள், ஆரஞ்சு என இரு பண்டங்களில் செலவிட விரும்புகிறார்.எனக் கொண்டால் அவர் கீழ்கண்டவாறு சமநிலையில் இருப்பார்

$MU_A / P_A = MU_O / P_0 = K$ ஆப்பிள் = ரு 2, ஆரஞ்சு = ரூ.3 என்க. பணத்தின் இறுதிநிலை பயன்பாடு $K = 6$ யுட்டில்ஸ் என்க.

நுகர்வோர் 5 அலகு ஆப்பிளை வாங்கும் போது $MU_A / P_A$ = 6 யுட்டில்ஸ் ஆகவும், 3 அலகு ஆரஞ்சை வாங்கும் போது $MU_O / P_0$ = 6 யுட்டில்ஸ் ஆகவும், இருக்கும் நிலையில் நுகர்வோர் சமநிலையில் இருப்பார்.

## LESSON-4

***5. பல்வேறு செலவு கருத்துக்களை விளக்குக.விளக்குக.***

**பல்வேறு செலவுகள்.**

**1. பணச்செலவு:**-பணமாக செலவிடுகின்ற அனைத்து தொகையையுமே பணச்செலவு ஆகும் எ.கா. மூலப்பொருள் செலவு மற்றும், கூலி

**2. உண்மைச் செலவு** :-இது உள்ளுணர்வு சார்ந்த கருத்தாகும்

**3. பிறவாய்ப்புச் செலவு:-**அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும்.

**4.வெளியுறுச் செலவு.**:- உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள். எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி மற்றும் சம்பளம்.

**5. உள்ளார்ந்த செலவுகள்:-** ஒரு தொழில் முனைவோர் தனக்கு சொந்தமான காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் அதற்கான வெகுமதியே உள்ளார்ந்த செலவுகள் ஆகும்

**6. பொருளாதாரச் செலவு** .= வெளியுறுச் செலவு + உள்ளார்ந்த செலவுகள்

***6. பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக?***

**சராசரி வருவாய் :-** மொத்த வருவாயை விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைப்பதாகும்.

**இறுதிநிலை வருவாய் :-** மொத்த வருவாயில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.

**AR** மற்றும் **MR** கோடுகளிடையே உள்ள உறவு

**1. விலை மாறாதபோது** :-_AR மற்றும் MR கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது Xஅச்சுக்கு இணையாக இருக்கும். P=AR=MR

2. விலை மாறும் **போது** :- **AR** கோட்டிற்கு கீழே **MR** கோடு இருக்கும்.


***7. குறுகியகால செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி?***

**மொத்த மாறாச் செலவுகள் :-** உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை.

**மொத்த மாறும் செலவு :-** உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப செலவுகள் மாறுபடும்.

**மொத்தச் செலவு :-** மொத்தச் செலவு என்பது மொத்த மாறாச் செலவையும் மொத்த மாறும் செலவையும் கூட்டிய மொத்த தொகையாகும்.

**சராசரி செலவு :-** மொத்தச் செலவை உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைப்பதாகும்



**இறுதிநிலைச்செலவு :-** மொத்தச் செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படும்.
செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.

***8. மொத்தச் செலவு (TC)= $10+Q^3$, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.***

**மொத்தச் செலவு = $10+Q^3$, எனில்**

**1. TFC = 10**

AFC = TFC/Q = 10 / 5 = 2.

**2. AFC = 2**

AVC = TVC / Q = ( $Q^3$ /Q ) = $5^3/5$ =125 / 5 = 25

**3. AVC = 25**

AC = AFC + AVC = 2 + 25 = 27

**4. AC = 27**

## LESSON-5

***9. நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்கவும்?***

**நிறைவுப் போட்டியின் இயல்புகள்**

**1. எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும் கொண்ட ஓர் அமைப்பாகும்.**

**2.ஒரே தன்மையுடைய பண்டங்கள்**--பண்டம் ஒன்றுக் கொன்று பதிலீட்டுகளாக உள்ளன.

**3. வாங்குவோர் மற்றும் விற்போர்அங்காடி நிலை பற்றி முழுமையாக அறிந்திருத்தல்**

**4. உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை.**--இது நீண்டகாலத்தில் மட்டும் ஏற்படக் கூடியதாகும்.

**5. உற்பத்திக் காரணிகள் இடம்பெயரும்.**--உற்பத்திக் காரணிகள் அதிக வருமானம் கிடைக்கும் போது ஒரு தொழிற்சாலையில் இருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு இடம்பெயரும்.

**6.போக்குவரத்துச் செலவு இல்லை.**---ஒரே விலை நிலவுவதால் போக்குவரத்துச் செலவு இடம் பெறுவது இல்லை.

**7.அரசின் தலையீடு இல்லை/ மந்தன கூட்டு இன்மை.**--அங்காடி சக்திகள் விலையை தீர்மானிக்கும். வாங்குவோர்க்கும், விற்போருக்கும் இடையே ரகசிய ஒப்பந்தம் இல்லை.

***10.நிறைவுப்போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப் படுகின்றன?***


**நிறைவுப்போட்டி**

இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். ஒரே விலை நிலவும்

**வருவாய் கோடுகளும், செலவுக்கோடுகளும்:-**

AR மற்றும் MR கோடுகள், Xஅச்சுக்கு இணையாக இருக்கும்.. செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.

**நிறுவனச்சமநிலை :**நிறைவுப் போட்டியில் சமநிலையானது SMC=SMR என்ற நிலையில் இருக்கும். அப்பொழுது சமநிலைவிலை தீர்மானிக்கப்படும்.இதை கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது.




**வரைபட விளக்கம்:-**

1. Q என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.

2. . OP என்பது சமநிலை விலை OM என்பது சமநிலை உற்பத்தி.

3. PQRS என்பது நிறுவனம் ஈட்டும் அதிகப் படியான லாபம்.

***11.முற்றுரிமையில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?***

***முற்றுரிமை:-***

1. ஒரே ஒருவிற்பனையாளர் மட்டும் இருப்பார் 2.விலையில் மாற்றம் இருக்கும்.

**வருவாய் கோடுகளும் செலவுக் கோடுகளும் :-** முற்றுரிமையில் வருவாய் கோடுகள் மேல் இருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.AR கோட்டிற்கு கீழ் MR கோடு அமைந்திருக்கும்.செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**நிறுவனச்சமநிலை:-** முற்றுரிமையில் நிறுவனச் சமநிலையானது MC=MR என்ற நிலையில் இருக்கும்..




**வரைபட விளக்கம்:-**
1. E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.
2. OP என்பது சமநிலை விலை OM என்பது சமநிலை உற்பத்தி.
3. PQRS என்பது நிறுவனம் ஈட்டும் அதிகப்படியான லாபம்.
.

***12. முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?***

**முற்றுரிமைப் போட்டி -** பேராசிரியர் E.H.சேம்பர்லின் அறிமுகப் படுத்தினார் இப் போட்டியில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உற்பத்தியாளர்கள் இருப்பர் பதிலீட்டு பண்டங்கள் இருக்கும்.




**வருவாய் கோடுகளும், செலவுக்கோடுகளும்:-**
வருவாய் கோடுகள் மேல் இருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.AR கோட்டிற்கு கீழ் MR கோடு அமைந்திருக்கும். செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.
**நிறுவனச்சமநிலை** முற்றுரிமைப் போட்டியில் நிறுவனச்சமநிலையானது MC=MR என்ற நிலையில் இருக்கும்.
**வரைபட விளக்கம்**
1..E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.
2.OP என்பது சமநிலை விலை ON என்பது சமநிலை உற்பத்தி. 3 .PQRS என்பது நிறுவனம் ஈட்டும் அதிகப்படியான லாபம்.

***13.சில்லோர் முற்றுறிமையின் பண்புகளை விளக்குக.***

**சில்லோர் முற்றுறிமை.** இங்கு சில நிறுவனங்களே ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும். எ.கா எண்ணெய் மற்றும் வாயு.
**இயல்புகள்.**
1. பெரிய நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் தேவையைக் கட்டுப்படுத்தும்.
2. குழுவாகச் செயல்படவேண்டிதை அறிந்திருப்பர்.
3. விள்ம்பரச் செலவின் அவசியத்தை அறிந்திருப்பர்.
4. பண்டத்தின் தன்மை ஒரே மாதிரியான பொருள் உற்பத்தி ஆகும்
5. விலையில் மாற்றமில்லை.

## LESSON-8

***14. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி?***

**1. சமூக நலத்தை அடைவதே முதன்மையான நோக்கம்**
**2. வேளாண்மை, சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் விரிவுபடுத்துவதற்கும் நிதி தேவைப்பட்டது.**
**3.தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்த.**
4. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்த **உதவுகின்றன**
**5. கிராமபுற மக்களிடைய வங்கி செயல்பாடுகளை ஊக்குவித்தல்.**

***15. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி***

பொருளாதாரத் திட்டமிடுதலன் நோக்கம் பற்றாக்குறையான வளங்களை திறமையாக பயன்படுத்தி இலக்குகளை அடைவதாகும் இதுவரை இந்தியா 12 திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. தற்போது திட்டகுழுவற்கு பதிலாக நதிஆயோக் மூலம் திட்டமிடுதல் மேற்கொள்ளப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

***16. பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி***

**1) சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு 2) சிறு தொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி.**
**3 உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது**
**4.மூலதனபயன்பாடு முழுமை பெற சிறு தொழில் வழி வகுக்கிறது**
**5. சிறு தொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.**
**6. பெரிய அளவிளான தொழில்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு**
**7. சிறு தொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகின்றன.**

***17. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க ?***

**1. வாஸ்கோடகாமா கோழிக்கோட்டிற்கு வந்ததற்குப் பின்னரே இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுடனான கடல் வாணிகம் ஆரம்பித்தது.**
**2. ஆங்கிலேயர்கள் இந்தியப் பெருங்கடல் வழி வாணிகத்தைத் தொடங்கினர் .இந்தியாவின் பல்வேறு பகுதிகளை மெதுவாக ஆக்கிரமிப்பு செய்தனர்..**
**3. ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் காலனி ஆதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகளுக்கும் மேலாக சீரழித்து வந்தது**
**4. காலனி ஆதிக்கத்தின் அடிப்படையில் காலத்தையும் மூன்று கட்டங்களாகப் பிரித்தனர். அவை, 1. வணிக மூலதனக் காலம், ---. ஆங்கிலேயர்கள் வாணிபம் செய்து** இந்திய வளங்களை சுரண்டி இங்கிலாந்திற்கு கடத்தியது.
**2. தொழில் மூலதனக் காலம் --- பிரிட்டிஷ் துணிமணிகளின் சந்தையாக இந்தியா விளங்கியது.**
**3. நிதி மூலதனக் காலம்.--- இந்திய மூலதனத்தைக் கொள்ளையடித்து இந்தியாவில் இருப்புப் பாதை , சாலை வசதிகள், அஞ்சலகத்துறை மற்றும் கல்வியில் முதலீடு செய்ய பிரிட்டன் முடிவு செய்தது.**

## LESSON-10.

***18. ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை: விவாதி.***

**1. வேளாண்மையை சார்ந்திருத்தல்: ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண்நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.**
**2. ஊரக மக்க ளின் வாழ்க்கை முறை: பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரம் ஏழ்மை நிலையிலும், பரிதாபகரமாகவும் உள்ளது.**
**3. மக்கள் தொகை அடர்த்தி: மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன**
**4. வேலைவாய்ப்பு: பருவகால வேலையின்மை மற்றும் குறை வேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.**
**5. வறுமை :- 2011- 12 ன் மதிப்பீட்டின்படி ஊரகப் பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.**
**6. கடன் சுமைகள்: “ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து கடனையே விட்டுச் செல்கின்றான்”. எனவே , கிராம மக்கள் கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.**
**7. ஏற்றத்தாழ்வு: ஊரக பகுதிகளில் சமூக, மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகிறது.**

***19. ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.***

**1. மக்கள் தொடர்புடைய பிரச்சினை: எழுத்தறிவின்மை, போதிய தொழில் நுட்பஅறிவின்மை, நம்பிக்கை குறைவு, ஆகியன ஊரக மக்களின் பிரச்சினைகள்.**
**2. வேளாண்மை சார்ந்தபிரச்சனைகள்: 1. நிலங்கள் துண்டாடப்பட்டு சிறிது சிறிதாக இருத்தல் 2. போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை 4. பழமையான தொழில்நுட்ப முறைகள்.**
**3. உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்: நீர், மின்சாரம், போக்குவரத்து, ., தகவல் தொடர்பு, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.**
**4. பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்:,குறைவான வருமானம், கடன் சுமை ஆகியவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளாக உள்ளது**
**5. நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்: குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையாக பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகச் சிக்கல்கள் ஆகும்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

***20. ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.***

**1. விவசாயிகளின் ஏழ்மை நிலை: நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்ப விழாக்களுக்காவும் விவசாயிகளை கடன்பெறத் தூண்டுகிறது**

**2. பருவமழை பொய்த்தல்: அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவதால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர்.**

**3. வழக்குகள்: நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள்**

**4. அதிக வட்டி வீதம்: உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது.**

**LESSON-11.**

***21. மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி***

1.. **2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடி.**

**2. மொத்த மக்கள் தொகையில் 6-சவீதத்தைக் கொண்டுள்ளது தமிழகம்**

**3.இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12-வது இடத்தில் உள்ளது.**

**4. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும்.**

**5. பாலின விகிதத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.**

**6. தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் குறைவாகவுள்ளது.**

**7. மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுபடுத்துவதில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.**

**8. தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகளாக ஆக உள்ளது.**

12. . **தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலை முன்னேறிய நிலையில் உள்ளது.**

***22. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி***

1. .**கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்**

**2. தமிழ்நாட்டில் அனல்மின் உற்பத்தி, மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது.**

**3. கருந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமான புனல் மின் நிலையங்கள் ஆகும்.**

**4. தென்தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது**

**5. இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்டமாநிலமாகஉள்ளது.**

**6. காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி, தூத்துக்குடியின் தெற்குப் பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.**

***23. தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக***

**1. தமிழ்நாடு மிகச் சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.**

**2. நாட்டிலுள்ள நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களை இணைக்க கூடியத் தரமான சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது**

**3. தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது**

**4. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.**

**5. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்தநீளம் 6693 கி.மீ. ஆகும்.**

**6. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதி விரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**7. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது. கோயம்புத்தூர் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.**

**8. சென்னை, எண்ணூர், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும்**

**9. சென்னை துறைமுகம் கன்டெயினர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கைத் துறைமுகமாகும்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com